**கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை ஆணைகள்**
**முன்னிலை: திரு.சி.கதிரவன், இ.ஆ.ப.,**

ந.க.20985/2017/பே.மே. நாள்: 23.10.2017

பொருள்: பேரிடர் மேலாண்மை - கிருஷ்ணகிரி மாவட்டம் - கூடுதல் மண்டல குழுக்கள் (Backup Zonal Teams) அமைத்தல் - இயற்கை இடர்பாடுகளால் ஏற்படும் பாதிப்புகளை தணிக்கும் களப்பணிகள் - வட்டார அளவில் அமைக்கப்பட்ட மண்டல குழுக்களுடன் கூடுதல் மண்டல குழுக்கள் (Backup Zonal Teams) அமைத்தல் - ஆணைகள் பிறப்பித்தல்.

பார்வை:
1. முதன்மை செயலாளர் / வருவாய் நிர்வாக ஆணையர் அவர்களின் ஆய்வுக் கூட்ட அறிவுரைகள் நாள்: 23.08.2017,
2. கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை ஆணைகள் (மண்டலக் குழுக்கள்) ந.க. 20985/2017/பே.மே, 30.08.2017,
3. முதன்மை செயலாளர் / வருவாய் நிர்வாக ஆணையர் அவர்களின் காணொலிக் காட்சி ஆய்வுக் கூட்ட அறிவுரைகள் நாள்: 12.10.2017.

- - - - -

**ஆணை:**

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் இயற்கை இன்னல்களால் ஏற்படும் பாதிப்புகளை உடனுக்குடன் மாவட்ட நிர்வாகத்திற்கு தெரிவித்து உடனடி நடவடிக்கை எடுக்கும் பொருட்டு வட்டார (Block level) அளவில் மண்டல குழுக்கள் (Zonal Team) அமைத்து பார்வை-2ல் காணும் செயல்முறை ஆணைகள் பிறப்பிக்கப்பட்டது. தற்போது வடகிழக்குப் பருவமழையை எதிர்நோக்கி அதிக/மிதமான (High / Medium Vulnerable) பாதிப்பு பகுதிகள் என கண்டறியப்பட்ட மண்டலங்களுக்கு ஏற்கனவே அமைக்கப்பட்ட மண்டல குழுக்களுக்கு துணைபுரியவும், மண்டல அளவில் ஒன்றுக்கு மேற்பட்ட பகுதிகளில் பாதிப்புகள் ஏற்படும் போது களப்பணி மேற்கொள்ளவும் கூடுதல் மண்டல குழுக்கள் (Backup Zonal Teams) நியமனம் செய்து ஆணையிடப்படுகிறது.

**கூடுதல் மண்டலக் குழு (Backup Zonal Teams) அலுவலர்கள் விபரம்:**

வட்டார அளவில் பதில் மண்டல பொறுப்பு அலுவலர்கள் நியமனம் செய்த குழுக்களின் பட்டியல் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

**கூடுதல் மண்டல குழுக்கள் செய்ய வேண்டிய பணி விவரங்கள்:**

1. குழுவினர் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட வட்டாரத்தில் புலத்தணிக்கை செய்து ஏரிகளின் கரைகள் / மதகுகள் நிலை குறித்து அறிந்து மேற்கொள்ள வேண்டிய பணிகள் ஏதுமிருப்பின் அது குறித்து கீழ்காணும் மாவட்ட அளவிலான நடமாடும் குழு அலுவலர்களுக்கு தெரிவித்து அறிக்கை அனுப்ப வேண்டும்.

. . . 2 . . .

மாவட்ட அளவிலான நடமாடும் குழு அலுவலர்கள் விபரம்

| வ.எண். | அலுவலரின் பதவி | கைபேசி எண் |
|---|---|---|
| 1. | மாவட்ட வருவாய் அலுவலர், கிருஷ்ணகிரி | 9445000909 |
| 2. | மாவட்ட வன அலுவலர், ஓசூர். | 9445468198 |
| 3. | திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, கிருஷ்ணகிரி | 7373704210 |
| 4. | மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது), கிருஷ்ணகிரி. | 9445008141 |

2. மழை வெள்ளத்தின்போதோ / பேரிடர்களின்போதோ ஏற்கனவே அந்த வட்டாரத்திற்கு நியமனம் செய்யப்பட்ட மண்டல குழுவிற்கு உதவிகளை செய்யவேண்டும். ஒரே வட்டாரத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட பகுதிகளில் அவசரகால நடவடிக்கை தேவைப்படும்போது மாவட்ட அளவிலான குழு அலுவலர்கள் தெரிவிக்கும் பகுதிகளில் நிவாரணப் பணிகள் / தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளவேண்டும்.

3. தங்களது பொறுப்பு நியமனம் செய்த வட்டாரத்தில் பாதிப்பு இல்லாதபோது மாவட்ட அளவிலான குழு அலுவலர்கள் தெரிவிக்கும் வேறு எந்த பகுதியிலும் நிவாரணப் பணிகள் / தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளவேண்டும்.

4. மழை / பெருமழையின் போது நாள் தோறும் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட இடங்களை பார்வையிட்டு அதன் நிலை பற்றிய அறிக்கையினை தொலைபேசி மற்றும் வாட்ஸ்அப் செய்தி மூலம் தகவல் தெரிவித்து உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

5. தங்களுக்கு ஒதுக்கப்பட்ட ஊராட்சி ஒன்றியங்களில் பாதிப்புள்ளாகும் பகுதிகள் என கண்டறியப்பட்டு குறிக்கப்பட்ட இடங்களை தணிக்கை செய்து அருகில் உள்ள மேடான பகுதிகள் மற்றும் மாற்று வழிகள் தெரிந்து வைத்திருக்க வேண்டும்.

6. தங்களுக்கு ஒதுக்கப்பட்ட பகுதிகளில் ஏரிகளின் கரைகளை சரிபார்த்து ஆக்கிரமிப்பு ஏதும் இருந்தால் சம்பந்தப்பட்ட வட்டாட்சியர் / வட்டார வளர்ச்சி அலுவலர் / பொது பணித்துறையின் உதவி செயற்பொறியாளர் ஆகியோருக்கு அதன் விவரத்தினை தெரிவித்து உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும். மேலும் ஆக்கிரமிப்பு அகற்றிய பணி குறித்தும் பிரதி வாரம் வியாழன் அன்று அறிக்கை அனுப்பவேண்டும்.

7. பெருமழை வெள்ளம் ஏற்படும் போது அவ்விடங்களின் அருகில் வசிக்கும் மக்களை பாதிப்புகள் ஏதுமின்றி மேடான பகுதிகளுக்கு அனுப்பி வைக்க சம்பந்தப்பட்ட குழுவினர் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

. . .3. . .

8. மழையால் ஏற்படும் வெள்ளபாதிப்பை தடுக்கும் வகையில் மணல் மூட்டைகள் தயார் நிலையில் உள்ளனவா என்று இக் குழு கண்காணித்து அவசர காலங்களில் பயன்படுத்த ஏதுவாக தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும்.

9. பள்ளிக்கூடங்கள், கல்யாண மண்டபங்கள், சமூதாயக் கூடங்கள் இவைகளில் எவை புயல் பாதுகாப்பு மையமாக பயன்படுத்த இயலும் என்பதையும் அதன் நிலையையும் புல தணிக்கை செய்து உறுதிபடுத்தி அறிந்து வைத்திட வேண்டும்.

10. தங்கள் பகுதிக்குட்பட்ட மீட்பு பணிக்கான இயந்திர அறுவை இயந்திரம், மண்வெட்டி, கோடாரி, கயிறு, மணல் மூட்டை மற்றும் பொக்லைன் ஆகியவற்றை தயார் நிலையில் வைத்திட வேண்டும்.

11. கடந்த கால அனுபவத்தின் அடிப்படையில் வெள்ளம் பாதிக்கப்பட்ட பகுதிகள் / பாதிக்கப்படும் பகுதிகள் என கண்டறியப்படும் பகுதிகள், நீர் அடைப்பு ஏற்படும் பகுதிகள் குறித்து கண்டறிந்து வட்ட / வட்டார அளவிலான நீர் வழித்தடங்களுக்கான வரைப்படங்கள் தயாரித்தும், ஊறல் குழி (Soakaa pit) அமைத்திடவும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

**குழுத் தலைவர்கள், தங்கள் எல்லைக்குட்பட்ட ஏரிகளை வருவாய் வட்டாட்சியர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், ஒன்றியப் பொறியாளர்கள், மண்டல துணை வட்டாட்சியர்கள், வருவாய் ஆய்வாளர்கள், கிராம நிர்வாக அலுவலர்கள் ஆகியோருடன் தணிக்கை செய்து அவசர கால தேவைகளை உரிய நேரத்தில் செய்திடவும் ஆணையிடப்படுகிறது.**

மேலும் எந்தவொரு அவசர நிகழ்வையும் உடனுக்குடன் தொலைபேசியில் மாவட்ட நிர்வாகத்திற்கு தெரிவித்து அதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறதா என்று கண்காணித்து அறிக்கை அனுப்பிட வேண்டும்.

இணைப்பு: 1) கூடுதல் மண்டலக் குழு அலுவலர்கள் பட்டியல்.

2) Vulnerable Area list

(ஒம்/-) சி.கதிரவன்,
மாவட்ட ஆட்சியர்,
கிருஷ்ணகிரி.

/ உண்மை நகல் /

மாவட்ட ஆட்சியருக்காக.

**பெறுதல்**

சம்மந்தப்பட்ட அலுவலர்கள். (அலுவலக மின்னஞ்சல் வாயிலாக).

**நகல் :** மாவட்ட வருவாய் அலுவலர், கிருஷ்ணகிரி,

திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, கிருஷ்ணகிரி,

. . .4 . . .

நகல்: மாவட்ட வன அலுவலர், ஓசூர்,

இணை இயக்குநர் (வேளாண்மை), கிருஷ்ணகிரி.

இணை இயக்குநர் (தோட்டக்கலை), கிருஷ்ணகிரி,

மாவட்ட அலுவலர், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள், கிருஷ்ணகிரி,

மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது), கிருஷ்ணகிரி,

சார் ஆட்சியர், ஓசூர், (ஓசூர் மண்டலக் குழுத் தலைவர்)

வருவாய் கோட்ட அலுவலர், கிருஷ்ணகிரி,
(கிருஷ்ணகிரி மண்டலக் குழுத் தலைவர்)

உதவி ஆணையர் (ஆயம்), கிருஷ்ணகிரி,
(காவேரிப்பட்டிணம் மண்டலக் குழுத் தலைவர்)

உதவி இயக்குநர் (ஊராட்சிகள்), கிருஷ்ணகிரி,
(சூளகிரி மண்டலக் குழுத் தலைவர்)

மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (சத்துணவு), கிருஷ்ணகிரி,
(கெலமங்கலம் மண்டலக் குழுத் தலைவர்)

மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை), கிருஷ்ணகிரி,
(தளி மண்டலக் குழுத் தலைவர்)

மாவட்ட ஆட்சியர் நேர்முக எழுத்தர் மேஜைக்கு.

# வட்டார அளவிலான கூடுதல் மண்டலக் குழுக்கள்
# (Backup Zonal Teams)

**மாவட்டம்: கிருஷ்ணகிரி**

| வ.எ. | வட்டாரம் / மண்டலம் | உதவி இயக்குநர் (குழுத் தலைவர்) | குழு அலுவலர்கள் | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | வருவாய்த் துறை | ஊரக வளர்ச்சி | நகராட்சி / பேரூராட்சி | வனத்துறை | தீயணைப்பு துறை | வேளாண்மை துறை | தோட்டக்கலை துறை | இதர அலுவலர்கள் / பணியாளர்கள் |
| 1 | கிருஷ்ணகிரி | திரு.பழனிசாமி,<br>உதவி இயக்குநர்<br>(தணிக்கை), கிருஷ்ணகிரி<br>9965644407 | திரு.ஜி.வெங்கடேசன்,<br>தனி வட்டாட்சியர்<br>(ஆ.தி.ந), கிருஷ்ணகிரி<br>9626825200 | திரு. எஸ்.வீ. ராஜா,<br>வட்டார வளர்ச்சி அலுவலர்,<br>(கி.ஊ), கிருஷ்ணகிரி<br>ஒன்றியம்,<br>7402607062 / 9443091577 | திரு. தாமஸ்,<br>நகராட்சி ஆணையாளர்<br>(பொ), கிருஷ்ணகிரி<br>9750210244 | திரு.எஸ். பிரபுதலையன்,<br>வனக்காப்பாளர், பர்கூர்,<br>9486599044 | திரு.விஜயகுமார்,<br>கிருஷ்ணகிரி.<br>8883446728 | திரு. பீ.செல்வகுமார்,<br>வேளாண்மை<br>அலுவலர்,<br>கிருஷ்ணகிரி<br>9865395578 | திரு. எம். தங்கதுரை,<br>உதவி தோட்டக்கலை<br>அலுவலர், கிருஷ்ணகிரி<br>9655567637 | சம்மந்தப்பட்ட மண்டல<br>துணை வட்டாட்சியர்,<br>வருவாய் ஆய்வாளர்,<br>கிராம நிர்வாக அலுவலர்,<br>பஞ்சாயத்து செயலாளர்<br>மற்றும்<br>முதல் பொறுப்பாளர்<br>(First Responders) |
| 2 | காவேரிப்பட்டிணம் | திருமதி. மாலா,<br>உதவி திட்ட அலுவலர்,<br>(Wage & Employment),<br>DRDA, கிருஷ்ணகிரி<br>9443263180 | திரு. வீ. நிரஞ்சன்குமார்,<br>தனி வட்டாட்சியர்,<br>சிப்காட்.<br>7598473377 | திரு. எம். அசோகன்,<br>வட்டார வளர்ச்சி அலுவலர்<br>(கி.ஊ), காவேரிப்பட்டிணம்<br>7402607017/ 8870069816 | திரு. பெருமாள்,<br>செயல் அலுவலர்,<br>நாகோஜனஅள்ளி<br>பேரூராட்சி.<br>8883100210 | திரு.சி.கோவிந்தசாமி,<br>வனக்காப்பாளர்,<br>வரட்டனபள்ளி.<br>8012302081 | திரு.டீ. ராமு,<br>பர்கூர்.<br>8344027486 | திரு. செந்தில்குமார்,<br>வேளாண்மை<br>அலுவலர்,<br>காவேரிபட்டிணம்<br>9486448460 | திரு. சி. ராஜேந்திரன்,<br>உதவி தோட்டக்கலை<br>அலுவலர்,<br>காவேரிபட்டிணம்.<br>9940940897 | |
| 3 | சூளகிரி | திரு. பாலசுப்ரமணியம்,<br>செயலாளர்,<br>மாவட்ட ஊராட்சிகள்,<br>கிருஷ்ணகிரி<br>9442523193 | திரு.ஆர். முத்துப்பாண்டி,<br>தனிவட்டாட்சியர்,<br>சிப்காட். 9442319128 | திரு. ஆர்.சுந்தரபாஸ்கர்,<br>வட்டார வளர்ச்சி அலுவலர்,<br>(கி.ஊ), சூளகிரி<br>7402607039/ 9442439076 | --- | திரு. சி.ராஜமாணிக்கம்,<br>வனக்காப்பாளர்,<br>பூங்குர்த்தி, 9865269026 | திரு. எம்.<br>முத்துராஜன்,<br>கிருஷ்ணகிரி<br>9047857018 | திரு. ரவிகிஷோர்,<br>துணை வேளாண்மை<br>அலுவலர், சூளகிரி<br>9488346317 | திரு.சி.ரமேஷ்,<br>உதவி தோட்டக்கலை<br>அலுவலர், சூளகிரி.<br>9942974534 | |
| 4 | ஓசூர் | திரு. தாமஸ்ராஜன்,<br>மாவட்ட ஆட்சியரின்<br>நேர்முக உதவியாளர்<br>(தேர்தல்), கிருஷ்ணகிரி.<br>9942061670 | திரு.சி.செந்தில் குமார்,<br>தனி வட்டாட்சியர்,<br>குடிமைப் பொருள்<br>வழங்கல், ஓசூர்.<br>9791946791<br>9445000400 | திரு. டீ.சென்னகிருஷ்ணன்,<br>வட்டார வளர்ச்சி அலுவலர்<br>(கி.ஊ), ஓசூர்<br>7402607035/9442875945 | திரு. செந்தில் முருகன்,<br>நகராட்சி ஆணையாளர்,<br>ஓசூர்<br>9445157063 | திரு. குப்புசாமி,<br>வனக்காப்பாளர், மத்திகிரி<br>04344-262259 DFO<br>Office | திரு.எஸ்.<br>பாலமுருகன்,<br>கிருஷ்ணகிரி.<br>9629485180 | திரு.எம்.முருகேசன்,<br>துணை வேளாண்மை<br>அலுவலர், ஓசூர்<br>9443664590 | திரு.வீ.செந்தில்குமார்,<br>உதவி தோட்டக்கலை<br>அலுவலர், ஓசூர்<br>9994841455 | |
| 5 | கெலமங்கலம் | திரு.ராஜசேகரன்,<br>மாவட்ட ஆட்சியரின்<br>நேர்முக உதவியாளர்<br>(சிறுசேமிப்பு), கிருஷ்ணகிரி.<br>9600414925 | திரு. எம்.எச்.பாபு,<br>தனி வட்டாட்சியர்<br>(சிப்காட்). 9443982901 | திரு.ஓ. ஜெபராஜ் சாமுவேல்,<br>வட்டார வளர்ச்சி அலுவலர்<br>(கி.ஊ), கெலமங்கலம்<br>7402607044/ 9442917243 | திரு. சேம்கிங்ஸ்டன்,<br>செயல்அலுவலர்,<br>தேன்கனிக்கோட்டை<br>பேரூராட்சி.<br>8883100207 | திரு. மேகநாதன்,<br>வனக்காப்பாளர்,<br>ராயகோட்டை<br>9688484951 | திரு.சிதம்பரம்,<br>போச்சம்பள்ளி<br>7299827098 | திருமதி.<br>ஏ.புவனேஸ்வரி,<br>வேளாண்மை<br>அலுவலர்,<br>கெலமங்கலம்<br>9626177886 | திரு. எஸ். விஜயகுமார்,<br>உதவி தோட்டக்கலை<br>அலுவலர், கெலமங்கலம்.<br>9976382647 | |
| 6 | தளி | திரு. ராஜாராம்,<br>உதவி திட்ட அலுவலர்,<br>மகளிர் திட்டம்,<br>கிருஷ்ணகிரி<br>8668123156 | திரு.வீ. சண்முகம்,<br>ஆய மேற்பார்வை<br>அலுவலர், குளோபல்<br>கால்சியம்,<br>ஓசூர், 9442051160 | திரு. எஸ். சரவணபவா,<br>வட்டார வளர்ச்சி அலுவலர்<br>(கி.ஊ), தளி<br>7402607048/ 9442689770 | --- | திரு. சி. மாறன்,<br>வனக்காப்பாளர், தளி<br>தெற்கு, 7639162207 | திரு.<br>என்.எஸ்.செல்வம்,<br>தேன்கனிக்கோட்டை 94860 93719 | திரு. வீ.சுரேஷ்குமார்,<br>வேளாண்மை<br>அலுவலர், தளி.<br>9443381881 | திரு. பி.செந்தில்குமார்,<br>உதவி தோட்டக்கலை<br>அலுவலர், தளி<br>9688002003 | |

ஒம்/- சி.கதிரவன்,
மாவட்ட ஆட்சியர்,
கிருஷ்ணகிரி.

/ உண்மை நகல் /

மாவட்ட ஆட்சியருக்காக.